விபரம் கேட்டால் அமைச்சர்களால் எப்படிப் பதில் சொல்ல முடியும்? ஆகவே, இதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை.

Manufacture of measuring tapes.

* 347. *Q.* Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have issued any warning on the manufacture of measuring tapes by private bodies in October 1972; and

(*b*) if so, the details thereof?

<u>மாண்புமிகு திரு. என். வி. நடராசன்</u>: (அ) & (இ): அங்குல அளவை நாடா அல்லது அங்குலம், மெட்ரிக் அளவுகள் கொண்ட அளவை நாடாக்கள் ஆகியவற்றைத் தயாரித்தல், விற்பனை செய்தல், வாங்குதல், பயன்படுத்துதல் ஆகியவை 1956-ஆம் ஆண்டு தர எடை–அளவைகள் சட்டம், தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு எடை–அளவைகள் செயற்படுத்துதல் சட்டம் ஆகியவற்றை மீறியதாகும் எனவும், இத்தவறு களைச் செய்பவர்கள் தங்கள் மீது வழக்கு தொடரப்படுத்துவதற்குட்பட்ட வராவார்கள் எனவும் ஒரு அறிக்கையை 1972 அக்டோபரில் அரசு வெளியிட்டது.

Students of Fisheries Technology.

* 348 *Q.* Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the students of the Fisheries Technology of the Central Polytechnic, Adyar, have gone on hunger strike in November 1972; and

(*b*) if so, the details thereof?

<u>மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து</u>: (அ) ஆம்.

(இ) மீனளத் தொழில் நுட்பவியல்—கப்பற்கலையியல் வகுப்பு மாணவர்கள் (1-வது, 2-வது ஆண்டு மாணவர்கள்), தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி 20–11–1972-லிருந்து உண்ணாவிரதம் இருந்தனர். மீனளத்துறைத் துணை இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி இணை இயக்குநர், மத்திய பல் தொழில் பயிற்சிப் பள்ளி முதல்வர் ஆகியோர் மாணவர்களின் கோரிக்கைகள் மீது அவசியமான விளக்கங்கள் கொடுத்த பின்னர், மாணவர்கள் 21–11–1972 அன்று உண்ணா விரதத்தைக் கைவிட்டனர்.